Nallur Branch Library

Registered as a Newspaper பக்கங்கள் 4 விலை ரூபா 5-00

Nallur Branch Library

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 29 (12.5.94) வியாழக்கிழமை ஒசை 84

## பல்கலைக்கழக அனுமதிக்கு வெட்டுப்புள்ளி கூடுதலாக இருக்கும்

1993 ஆகஸ்ட்டில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றியோரில் பலருக்கு இம் முறை அதிகூடிய புள்ளிகள் கிடைத்துள்ளதாகவும் இதனால் இவர்களுக்கான வெட்டுப்புள்ளிகள் கடந்த காலங்களை விட கூடுதலானதாகவே இருக்கும் எனவும் தெரியவந்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் மட்டும் மேற்படி பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்தில் தோற்றியவர்களில் இருநூறு பேர் முந்நூறுக்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. இதன் காரணமாகவே பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி உயர்வாக அமையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

### பெறுபேறுகள் வந்துசேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

1993 ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (சா/தர) பரீட்சையின் பெறுபேறுகள் கிடைக்கப் பெறாத தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய் தற்கொலை

(கொழும்பு)

கொழும்பு கோட்டை இராணுவ தலைமை அலுவலகத்தின் பிரதான வாசலில் காவலில் இருந்த இராணுவ சிப்பாய் தனது துப்பாக்கியினால் சுட்டு தற்கொலை செய்துள்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இனவாத சிறிலங்கா அரசிற்கு ஆயுத விநியோகத்தை நிறுத்துமாறு நெல்சன்மண்டேலாவிடம்கோரிக்கை

## விடுதலைப் புலிகள் விடுத்தனர்

(லண்டன்)

**தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதப் போக்கை கடைப் பிடிப்பதோடு, இராணுவ ரீதியிலும் ஒடுக்க முற்படும் சிறிலங்கா அரசிற்கு ஆயுதம் விற்பனை செய்வதை நிறுத்துமாறும், தமிழ் மக்களின் நியாய பூர்வமான விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளிக்குமாறும் தென்னாபிரிக்காவின் புதிய ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிடம் விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்தது.**

தென்னாபிரிக்காவில் 300 ஆண்டுகளாக நிலவிய சிறுபான்மையின் இனவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு புதிய ஜனாதிபதியாக கறுப்பின தலைவரான நெல்சன் மண்டேலா நேற்று முன்தினம் பதவி ஏற்றது தெரிந்ததே இது குறித்து விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்த வாழ்த்துச்செய்தியில் மேலும்;

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக் காணும் விடயத்தில் சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து அக்கறை செலுத்துவதாக இல்லை. இதன் காரணமாகவே சிறிலங்கா அரசாங்கத்துடன் நம் போராட வேண்டியுள்ளது.

இந் நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தென்னாபிரிக்காவின் முன்னைய வெள்ளையின அரசாங்கம் வழங்கி வந்த யுத்த வாகன, ஆயுத விற்பனையை நிறுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உலகம் முழுவதும் பாதிப்படைந்து துன்பத்தில் வாழும் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு புதிய தென்னாபிரிக்க அரசாங்கம் பெருமளவு ஒத்துழைப்பை வழங்கும் என எதிர்பார்க்கிறோம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாத செயற்பாடுகளால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா, காமினியை கொலைசெய்ய சர்வதேச அமைப்பு சதித்திட்டம்

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவையும், காமினி திசாநாயக்காவையும் கொலை செய்வதற்கு சர்வதேச தொடர்புடைய அமைப்பொன்று திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவிற்கு விடுக்கப்பட்டுள்ள கொலை மிரட்டல் தொடர்பாக தற்போது சிறிலங்கா இரகசியப் பொலிசாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்தக் கொலை அணியானது ஒரு பிரபல அரசியல்வாதியின் கீழ் இயங்குவதாகவும் இவ் அமைப்புக் குறித்த பலதகவல்கள் கிடைத்துள்ளதாகவும் சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் கூறுகின்றனர்

## கூரே, இரு ராணுவ அதிகாரிகளுக்கு நாட்டைவிட்டு வெளியேற தடைவிதிப்பு

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரேக்கும் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் இருவருக்கும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அரசாங்கத்தினால் மறைமுகமாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்ட நிலையில் இவர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் பூர்வாங்க விசாரணை நடை

பெற்று முடிந்த பின்னரே நாட்டைவிட்டு இவர்கள் வெளியேறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் இவர்கள் தொடர்பாக சகல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாட்டை தேர்தலின்முன் முற்றுகையிட அரசாங்கம் திட்டம்

...காவையும், காமினி திசாநாயக்காவையும் கொலை செய்வதற்கு சர்வதேச தொடர்புடைய அமைப்பொன்று திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் மேல் மாகாண ... டுள்ள கொலை மிரட்டல் தொடர்பாக தற்போது சிறிலங்கா இரகசியப் பொலிசாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும், சிறிலங்கா பாது...

இந்தக் கொலை அணியானது ஒரு பிரபல அரசியல்வாதியின் கீழ் இயங்குவதாகவும் இவ் அமைப்புக் குறித்த பலதகவல்கள் கிடைத்துள்ளதாகவும் சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் [illegible]கின்றனர்

# கூரே, இரு ராணுவ அதிகாரிகளுக்கு நாட்டைவிட்டு வெளியேற தடைவிதிப்பு

(கொழும்பு)

அமைச்சர் சிறிசேன கூரேக்கும் மற்றும் உயர் இராணுவ அதிகாரிகள் இருவருக்கும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு அரசாங்கத்தினால் மறைமுகமாக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள் என இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்ட நிலையில் இவர்களின் வெளிநாட்டுப் பயணத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பூர்வாங்க விசாரணை நடைபெற்று முடிந்த பின்னரே நாட்டைவிட்டு இவர்கள் வெளியேறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதுடன் இவர்கள் தொடர்பாக சகல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாதாள உலகத்தின் தலைவர் சிரேஷ்ட அமைச்சரின் செல்லப்பிள்ளை

''பாதாள உலகம்'' என அழைக்கப்படும் கொலைகார அமைப்பின் தலைவர் பிரபல அமைச்சர் ஒருவரின் செல்லப்பிள்ளையாகச் செயற்பட்டு வந்தார் என்றும் எனவே பொலிசார் இவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது

தற்போது இவர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதைத் தொடர்ந்து பல பாதிக்கப்பட்டவர்கள் இவர் தொடர்பாக பல தகவல்களை தெரிவித்துள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது

இதேவேளை பாதாள உலகம் தொடர்பாக முறைப்பாடு செய்யச் சென்றவர்கள் பொலிசாரினால் தாக்கப்பட்டதாகவும் தாக்கிய பொலிசாருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

மேற்படி அமைப்பின் தலைவர் நாரன்பிட்டிய சேரிப்பகுதியில் வாழ்ந்தவர் என்றும் இவரின் நடவடிக்கை காரணமாக மக்கள் இவரை தாக்கி அப்பகுதியில் இருந்து வெளி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கூரே வெளியேறிய பின் காமினிக்கு பலர் நல்லாசி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து சிறிசேன கூரே விலகியதைத் தொடர்ந்து அரசாங்கக்கட்சி உறுப்பினர் பலர் காமினி திசாநாயக்காவின் வீட்டிற்கு சென்று அவருக்கு நல்லாசிகள் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

இவ்வாறு நல்லாசிகளை தெரிவித்தவர்களுக்கு தான் மிகவிரைவில் அமைச்சரவை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மரணப்படையின் தலைவர் சொத்தி பிரதிபொலிஸ்மா அதிபரின் சகா

(கொழும்பு)

தெற்கில் இயங்கிய மரணப்படை ஒன்றின் தலைவரான சொத்தி உபாலி ஒரு ரிஸேர்வ் பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர் என இப்போது தெரிய வந்துள்ளது.

அதிக செல்வாக்குள்ள கொழும்பு அரசியல்வாதி ஒருவருக்குப் பாதுகாப்பு வழங்கும் பிரிவில் உபாலி கடமையாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்குக் கைத்துப்பாக்கி சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்டுள்ளது.

டொன் உபாலி ரஞ்சித் என்பது சொத்தி உபாலியின் சொந்தப் பெயர். அண்மையில் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வைத்து சித்திக் என்பவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதற்குப் பின்னணியில் இவர் உள்ளார் என்று பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். இவர் பற்றிய தகவல்களைத் தெரிந்தவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கும்படி பொலிசார் பொதுஜன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமா, லலித் கொலை ஆராய குழு நியமனம்

### காமினி தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, மற்றும் லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பாக ஆராய அமைச்சரவையில் விசேடமாக ஒரு குழு அமைக்கப்பட உள்ளதாக காமினி திசாநாயக்கா கூறினார்.

இக் குழுவினரின் பூர்வாங்க அறிக்கை கிடைக்கும்வரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆதரவளிக்குமாறும் தென்னாபிரிக்காவின் புதிய [illegible] விடம் விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்தது.

தென்னாபிரிக்காவில் 300 ஆண்டுகளாக நிலவிய சிறுபான்மையின் இனவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு புதிய ஜனாதிபதியாக கறுப்பினத்தவரான நெல்சன் மண்டேலா நேற்று முன்தினம் பதவி ஏற்றது தெரிந்ததே இது குறித்து விடுதலைப் புலிகள் அனுப்பி வைத்த வாழ்த்துச்செய்தியில் மேலும்;

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்றைக் காணும் [illegible] சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்து அக்கறை செலுத்துவதாக இல்லை. இதன் காரணமாகவே சிறிலங்கா அரசாங்கத்துடன் நம் போராட வேண்டியுள்ளது.

இந் நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தென்னாபிரிக்காவின் முன்னைய வெள்ளையின அரசாங்கம் [illegible] வந்த யுத்த வாகன, விழங்க[illegible] ஆயுத விற்பனையை நிறுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

உலகம் முழுவதும் பாதிப்படைந்து துன்பத்தில் வாழும் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு புதிய தென்னாபிரிக்க அரசாங்கம் பெருமளவு ஒத்துழைப்பை வழங்கும் என எதிர்பார்க்கிறோம்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இனவாத செயற்பாடுகளால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாட்டை தேர்தலின்முன் முற்றுகையிட அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்திற்காக யாழ். குடாநாட்டை முற்றுகையிடும் ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இம் முற்றுகை மூலம் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தி எதிர்வரும் பாராளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களில் வெற்றி கொள்வதே இதன் நோக்கம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒப்பரேசன் யாழ்தேவி மூலம் யாழ் குடாநாட்டை முற்றுகையிட இராணுவம் எடுத்த முயற்சி தோல்வி கண்டது; பெரும் இழப்புக்களையும் சந்திக்க வேண்டியும் வந்தது.

இதே சமயம், கடந்த நவம்பரில் பூநகரி இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல் நடவடிக்கை மூலம்யாழ் கடல் நீரேரியில் சிறிலங்கா கடற்படை தனது ஆதிக்கத்தை இழந்ததும், இதை தொடர்ந்து யாழ் குடா நாட்டு முற்றுகை முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

# அகதிகளை அனுப்பும் சுவிஸ் முடிவுக்கு கனடா கண்டனம்

(ரொறன்ரோ)

இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவை சுவிட்சர்லாந்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கனடிய சட்டமா அதிபர் மார்க்ஸ் பேக்கர் சுவிட்சர்லாந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் சுவிட்சர்லாந்து அரசின் முடிவைக் கண்டித்துள்ள அவர் இது தொடர்பாக கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். அத்துடன் வேறு நாடுகளில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தமது தாயகம் திரும்புவதற்கு வாய்ப்பான சூழல் ஏற்படுத்தப்படவில்லை என்று கூறும் சர்வதேச மன்னிப்பு சபையின் அறிக்கையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடற்பரப்பில் 3 மீனவரை காணவில்லை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் அடுத்தடுத்து நடைபெற்று வருகின்றன.

வடமராட்சி கிழக்கில் நாகர் கோயில் கடற் பகுதியில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் கடற் படையினர் பீரங்கி, மற்றும் துப்பாக்கி வேட்டுக்களை மேற்கொண்டவாறு வந்து மூன்று மீனவர்களை கைது செய்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற் படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டதாக ஒரு செய்தி தெரிவிக்கும் போது அம் மீனவர்களைக் கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சுழிபுரம் கரை நோக்கி கடற்படை பீரங்கி தாக்கு

(தொல்புரம்)

காரைநகர், சுழிபுரம் கடற்பரப்பில் இரவுவேளைரோந்து சுற்றி வந்த சிறிலங்கா கடற்படையினர் தமது விசைப்படகுகளில் இருந்து சுழிபுரம் மேற்கை அண்மித்த கரையோரப் பகுதிகளை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுழிபுரம் மேற்கு வறுத்தோலை பகுதியில் உள்ள சில வீடுகள் சிறு சேதத்திற்குள்ளாகின.

கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் ஆரம்பித்ததும் அவ்வேளை காரைநகர் தூம்பில் பிட்டி, சுரூனாபீச் காவலரண்களிலிருந்து மேற்படி பகுதிகளை நோக்கி எறிகணைகள் ஏவப்பட்டன. இவ் எறிகணைகள் சுழிபுரம் சவுக்கடி துறையை அண்மித்த பனை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். கல்வி வலயம் -1இல் இருநேர பாடசாலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயம் -1இல் உள்ள 1 ஏபி, 1சி பாடசாலைகள் இம் மாதம் 16-ம் திகதி தொடக்கம் இரு நேரப் பாடசாலையாக இயங்கவுள்ளன.

இதற்கான பணிப்பைஅதன் கல்விப்பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அனுப்பிவைத்துள்ளார் அவர் இது பற்றி தெரிவிக்கையில் எதிர்வரும் 16ம் திகதி தொடக்கம் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரையும் இருநேரமாக மேற்படி பாடசாலைகள் இயங்கவுள்ளன என தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பாக தம் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளதாகவும் இத்தீர்மானம் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கலந்து கொண்ட பதவிநிலை அலுவலர்களுக்கான கூட்டத்தில மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

## நோட்டம்

சிறிலங்கா விமானப் படையின் விமானம் ஒன்று நேற்று யாழ் குடாநாட்டில் பரவலாகப் பறந்து திரிந்து நோட்டமிட்டுச் சென்றது.

நேற்றைய தினம் 11 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்கு வந்த அவ்ரோ விமானம் பல தடவைகள் வட்டமிட்டு பல பகுதிகளையும் நோட்டமிட்டவண்ணமிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது எனினும் தாக்குதல் நடத்தியதாக தகவல் இல்லை.

## வரி விளம்பரம்

**சுருக்கெழுத்தாளர் பயிற்சி**

தேசிய பயிலுனர் கைத்தொழில் அதிகார சபையும், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகமும் இணைந்து வதிரியில் 1வருட கால தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சியினை ஆரம்பிக்கவுள்ளது. விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் வதிரியில்உள்ள கழகப் பயிற்சி நிலையத்தில் இம் மாதம் 13, 14-ந் திகதிகளில் பெற்றுக் கொள்ளலாம் - செயலாளர் (8249)

**ORGAN**
**விற்பனைக்கு**

YAMAHA 290 ஓர்கன் (புதியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: வள்ளுவர் கடை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (8258)

## இன்றைய நிகழ்வு

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 'இல்ல மெய்வல்லுநர்போட்டி' இன்று பிற்பகல் 2 மணிக்குவித்தியாலய அதிபர் திரு. பொ. அருணகிரிநாதன் தலைமையில், யாழ். புனித மரியாள் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (22)


**O/L**
**DAy CLASSES**

ஆரம்பமாகி விட்டன வாரத்தில் 4 நாட்கள் அனைத்துப் பாடங்களும் நடைபெறுகின்றன.

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி யாழ்.
(சி 9385)


## கிழிந்த நோட்டுகளால் குடாநாட்டில் பிரச்சினை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் புழக்கத்தில் உள்ள பணநோட்டுக்கள் சிதைவடைந்து செல்கின்றன சிதைவடையும் பணநோட்டுக்களுக்குப் பதிலாக புதிய பணநோட்டுக்களைப் புழக்கத்துக்கு விடுவதுக்கு அரசவங்கிகள் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளன.

நீண்டகால பாவனைகாரணமாக பண நோட்டுக்கள் சிதைவடைந்தும், கிழிவடைந்தும் உள்ளன. இவ்வாறான பண நோட்டுக்களுக்கு பிரதியீடாக புதிய பணநோட்டுக்கள் புகுத்தப்பட வேண்டும் ஆனால் இதற்காக புதிய பணநோட்டுக்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு வங்கி அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இதுவரை பயனளிக்கவில்லை.

கடல் வழியாகவோ, வான் வழியாகவோ புதிய பணநோட்டுகளை குடா நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு அரச வங்கிகளின் தலைமையகங்கள் தயக்கம் காட்டி வருகின்றன. (க)

## மூன்றாம் ஆண்டு நினைவு



**வீரவேங்கை கீரோ**
(இராமகிருஷ்ணன் இதயராசா)

| தாயின் மடியில்: | தாயக மண்ணில்: |
|---|---|
| 10 - 10 - 1973 | 12 - 05 - 1991 |

(12 05 91 அன்று வவுனியா கோழியாகுளத்தில் இலங்கை இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவடைந்தார் )

விடுதலை தேடிய வேங்கையே! உன்னிரு
விழியின் நெருப்பினிலே......
படுகளம் மீதினில் பகைவர் சரிந்தனர்
பச்சைமண் சிவந்ததடா,
காலத்தால் உன்நினைவானது போகுமோ?
கண்களில் ஆடுகின்றாய்,
மீளும் தமிழ்நிலம் மீதினில் உன்முகம்
பார்த்து மகிழ்ந்திருப்போம்.

-சகோதரன்

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (சி-9390)


## கணக்காளர் தேவை

கிளிநொச்சியில் எமது பொது நிர்வாக தொடர்பகத்தில் கணக்கியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணக்காளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- தகைமைகளுடனும் முன் அனுபவங்களுடனும் விண்ணப்பிக்கவும்.
- தகைமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.
- போக்குவரத்து, தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

விள. இல. 332
மே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(8257)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடாத்தும்

## பெண்களுக்கான தட்டச்சு இயந்திரம் திருத்தல் பயிற்சிநெறி

தகைமை: 1. க. பொ. த. [சா/த] சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2 தட்டச்சு பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

காலம்: 03 மாதம்

இடம்: 106, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் 14-05-94 (சனி) காலை 9 00 மணிக்கு ரி. ஆர். ஆர் ஓ காரியாலயத்திற்குகல்விச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

குறிப்பு; இடம் பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**
[ரி. ஆர். ஆர். ஓ. லிமிட்டெட்]
106, 4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-9380)

## தேவை

அச்சுக்கோப்பதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

திருவள்ளுவர் அச்சகம்
(யாழ் மாநகரசபை அருகில்)
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(8255)


## நினைவு கூருகின்றோம்..

## 12.05.1994

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - வெருகல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். இளங்கோ** (இத்தூஸ்பிள்ளை மேரிதாசன்- லிங்கநகர் - திருமலை)

முல்லைத்தீவு, முத்தையன்கட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**சுதன்** (அ சுந்தரராசா - புதுக்குடியிருப்பு - மணலாறு)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிகுண்டு வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**ராஜ-ஞானம்** (சானைக்குட்டி தனபாலசிங்கம் - கீரிமலை வீதி, மாவிட்டபுரம் - யாழ்)

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**வைரமுத்து** (தங்கத்துரை - எல். பி - 03 - மூதூர்)

1988ஆம் ஆண்டு யாழ். உரும்பராயில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2ம் லெப். சின்னக்கோந்தி** (இராசையா உதயபாலன் - உரும்பராய் கிழக்கு - யாழ்)

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**பிரான்சிஸ்** (சூசை பிரான்சிஸ் - தங்கவேலாயுதம்புரம் - அம்பாறை)

கிளி இரணைமடுப் பகுதியில் இந்தியப் படையினரால் சுடுக் கொல்லப்பட்ட விவசாய ஆராய்ச்சி ஊழியர்.

1991ஆம் ஆண்டு சின்னமடுவில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண் தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் சுந்தர்** (அடைக்கலம் அமிர்தநாதன் - 1-ம் வட்டாரம், நெடுந்தீவு - யாழ்)

வவுனியா - கோழியாகுளம், மாதர்பணிக்குளம், மகிழங்குளம், ரம்பைக்குளம், பூவரசங்குளம் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நிகழ்ந்த சமரில் வீரச்சாவெய்திய -

**அன்பன்** (நடராசா தவசீலன் - வாகனேரி - மட்டு)

**சிவசங்கர்** (நேசராசா உதயசங்கர் - தும்பங்கேணி - மட்டு)

**லெப். கஸ்ரோ** (இராசப்பு விமலநாதன் - மூதூர்- திருமலை)

**2ம் லெப் றிச்சட்** (சித்திரவேல் நாகேந்திரன் - மூதூர் - திருமலை)

**2ம் லெப் கீதன்** (சுந்தரலிங்கம் விமலச்சந்திரன்- செம்மலை - மணலாறு)

**2ம் லெப். வியசன்** (காராளசிங்கம் விக்னேஸ்வரன் - நெடுங்கேணி - மணலாறு)

**2-ம் லெப். செட்டு** (பெரியசாமி லோகேஸ்வரன்- அலம்பில் - மணலாறு)

**கேதீஸ்** (சாந்தலிங்கம் சாந்தகுமார் - முள்ளியவளை - முல்லைதீவு)

**பீலிஸ்** (சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை- முல்லைத்தீவு)

**புஸ்பகாந்த்**(ஜெகத்துரை சிவதர்சன் - குஞ்சுக்குளம் - மல்லாவி)

**2-ம் லெப். ஜெனா** (யோகநாதன் பிரான்சிஸ் சேவியர் - பள்ளிமுனை - மன்னார்)

**2-ம் லெப் அலோசியஸ்** (கந்தையா ரவிந்திரன் - மாந்தை - மன்னார்)

## மனைப்பொருளியலும் கைத்திறனும்

## ஆறாம் மாத நினைவலைகள்

ஆரம்பமாகி விட்டன
வாரத்தில் 4 நாட்கள்
அனைத்துப் பாடங்களும்
நடைபெறுகின்றன.

புதிய
உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்.

(சி 9385)


(12 05 91 அன்று வவுனியா கோழியாகுளத்தில் இலங்கை இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவடைந்தார் )

விடுதலை தேடிய வேங்கையே! உன்னிரு
விழியின் நெருப்பினிலே......
படுகளம் மீதினில் பகைவர் சரிந்தனர்
பச்சைமண் சிவந்ததடா,
காலத்தால் உன்நினைவானது போகுமோ?
கண்களில் ஆடுகின்றாய்,
மீளும் தமிழ்நிலம் மீதினில் உன்முகம்
பார்த்து மகிழ்ந்திருப்போம்.

-சகோதரன்

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (சி-9390)

106, 4-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி-9380)


## தேவை

அச்சுக்கோப்பதில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

திருவள்ளுவர் அச்சகம்
(யாழ் மாநகரசபை அருகில்)
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(8255)



# மனைப்பொருளியலும் கைத்திறனும்

## மகளிருக்கான
## டிப்ளோமா பயிற்சி நெறி

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- உடை தயாரித்தல்
- கை வேலை
- பூ வேலை

**பயிற்சிக் காலம் 6 மாதங்கள்**

- மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.
- பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பிரிவினருக்கான பயிற்சி திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பிரிவினருக்கான பயிற்சிகள் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விவரங்களுக்கு நேரில் வரவும்!

**புதிய கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: 16-5-94**
**புதிய சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 21-5-94**

# கலாலயா

விக்டோரியா வீதி,
யாழ். நகர்

(தொழிற் பயிற்சியகம்)
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

(சி-9389)


## ஆறாம் மாத நினைவலைகள்



### மேஜர் பூவழகு [விக்கி]

(இராணுவத் தொழில் நுட்ப பிரிவு தமிழீழவிடுதலைப்புலிகள்)
(சண்முகநாதன் விக்னேஸ்வரன்)
நயினாதீவு

தோற்றம்: **14 - 02 - 1965**
வீரச்சாவு: **12 - 11 - 1993**

“ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல அது ஒரு சரித்திர நிகழ்வு”

— தேசியத்தலைவர் வே. பிரபாகரன்.

இதே தினத்தில் வீரச்சாவை அணைத்துக் கொண்ட மாவீரர்களுக்கும் ஏனைய அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கம், மாவீரர் சிந்திய குருதியால் தமிழீழம் மலர்வது உறுதி.

-குடும்பத்தினர்

54 பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (8256)

திருமலை)

**2ம் லெப் றிச்சட்** (சித்திரவேல் நாகேந்திரன் - மூதூர் - திருமலை)

**2ம் லெப் கீதன்** (சுந்தரலிங்கம் விமலச்சந்திரன் - செம்மலை - மணலாறு)

**2ம் லெப். வியசன்** (காராளசிங்கம் விக்னேஸ்வரன் - நெடுங்கேணி - மணலாறு)

**2-ம் லெப். செட்டி** (பெரியசாமி லோகேஸ்வரன் - அலம்பில் - மணலாறு)

**கேதீஸ்** (சாந்தலிங்கம் சாந்தகுமார் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

**பீலிஸ்** (சுந்தரலிங்கம் சாந்தகுமார் - வற்றாப்பளை - முல்லைத்தீவு)

**புஸ்பகாந்த்** (ஜெகத்துரை சிவதர்சன் - குஞ்சுக்குளம் - மல்லாவி)

**2-ம் லெப். ஜெனா** (யோகநாதன் பிரான்சிஸ் சேவியர் - பள்ளிமுனை - மன்னார்)

**2-ம் லெப் அலோசியஸ்** (கந்தையா ரவிந்திரன் - மாந்தை - மன்னார்)

**ஈஸ்வரன்** (பெருமாள் சசிக்குமார் - அடம்பன் - மன்னார்)

**தேவா-தேவி** (ஜஸ்ரின் செல்டன் - தலைமன்னார் - மன்னார்)

**வின்சன்-நிக்சன்** (இராசரத்தினம் சுதாகரன் - வைரவகோயிலடி - பரந்தன்)

**கப்டன் வெங்கடேஸ்** (பாலசுப்பிரமணியம் மோகனதாஸ் - வேம்படி ஒழுங்கை, வல்வெட்டித்துறை - யாழ்)

**2ம் லெப் டியூட்சன்** (சிவப்பிரகாசம் கிறேசியன் - பெரியமாவடி - சாவகச்சேரி)

**2-ம் லெப். மண்டேலா** (தனபாலசிங்கம் தமிழழகன் - ஆறுகால்மடம் - ஆனைக்கோட்டை)

**கிரேஸ்** (இராமகிருஷ்ணர் இதயராசா - நீர்வேலி வடக்கு - யாழ்)

**லோகா** (சென்பற்றியான் டேவிட் - அரியாலை - யாழ்)

**அருள்-வெள்ளை** (முருகையா செல்வச்சந்திரன் - நாவற்குழி, கைதடி - யாழ்)

1992ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம், முசல்குத்திப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

**துரோணர்-செலஸ்ரின்** (தனையசிங்கம் நேசானந்தராசா - உடையார்கட்டு - முல்லைத்தீவு)

மட்டு, முனைக்காட்டுப் பகுதியில் இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்,

**திருத்தணி** (கணபதிப்பிள்ளை திருத்தணி முனைக்காடு - மட்டு)

1993ஆம் ஆண்டு கிளி. செல்வபுரம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரின் விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட செல்வபுரத்தைச் சேர்ந்த பெண்மணி

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

இக்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9388)

Nallur Branch Library

சிந்தனைக்கு

கனவுகள் உறங்குவோரின் கற்பனைகள்
கற்பனைகள் விழித்திருப்போரின் கனவுகள்
- ஸர் தாமஸ் ப்ளவுண்ட்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## ஹமீத்தின் ஆலோசனை

"ஜனாதிபதி மற்றும் பொதுத்தேர்தல் என்பன விரைவில் நடைபெறவுள்ளன. இவற்றிற்கு முன்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியமானதாகும். ஆனால், இனப்பிரச்சினையைத் தேர்தலுடன் தொடர்புபடுத்தாது அதை அரசியலாக்காது தனியாக எடுத்துத் தீர்க்க வேண்டும்." இவ்வாறு சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் தெரிவித்துள்ள கருத்தானது தீர்விற்கு அவசியமானது, ஆனால் எத்துணை சாத்தியமானது என்பதில் பலமான கேள்வி உள்ளது

முதலில் நாற்பத்திஐந்து வருடங்களுக்கு மேலாக வளர்ந்து ஓர் இடியப்பச் சிக்கல் போன்று ஆகிவிட்ட பிரச்சினைக்கு குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் தீர்வு காண்பதென்பது சாத்தியமானதொன்றல்ல. அவ்வாறு இல்லாது சாத்தியமாக்கக் கூடிய ஒரு வழி உண்டானால் அது தமிழர் தாயகத்தை தனியரசாக அங்கீகரிப்பது ஒன்றாகவே இருக்க முடியும். ஆனால், சிங்கள அரசைப் பொறுத்து அது அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்ட விடயமாகும்

இந்நிலையில், அமைச்சர் ஹமீத் தெரிவித்துள்ளது போன்று இவ்வருட இறுதிக்குள் எதிர்பார்க்கப்படும் தேர்தலுக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது சாத்தியமாகாத ஒன்றே. அத்தோடு, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரேவழி என்ற நிலைப்பாட்டைக் கொண்ட ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா அதிகாரத்தில் இருக்கும்வரை இம்முறையல்ல, அடுத்த தேர்தல்களில் கூட தீர்வு எட்டப்படுமோ என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும்.

இதேசமயம், இனப்பிரச்சினையைத் தேர்தலுடன் தொடர்புபடுத்தி அதை அரசியல் ஆக்காது தனிப்பிரச்சினையாக எடுத்துத் தீர்க்க வேண்டும் என்ற அமைச்சர் ஹமீத்தின் கூற்றானது, இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வு ஒன்று காண்பதற்குச் சிறப்பானதொரு ஆலோசனைதான். இது அவரது நீண்டகால அரசியல் அனுபவத்தின் காரணமாக வெளிவந்ததாகவும் இருக்கலாம்.

ஆனால், இது எந்தவகையிலும் சாத்தியமாகக்கூடியதல்ல. ஏனெனில்இதில் ஹமீத்தின்கருத்தே முரண்பாடாக உள்ளது. தேர்தலின் முன்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என அமைச்சர் ஹமீத் கூறியதே அவரது முன்னைய கருத்திற்கு முரணான கூற்றாகும். அதாவது, ஹமீத்தே விரும்பியோ விரும்பாமலோ தேர்தலுடன் இனப்பிரச்சினையை இணைத்துவிட்டார் என்பதே உண்மையாகும்.

இந்நிலையில், ஒவ்வொரு தேர்தலிலும் ...

## பொலிசாரிடம் இருந்து இளைஞருக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவு

(கொழும்பு)

என் உயிருக்கு ஆபத்து, பாதுகாப்பு வழங்குங்கள் எனக் கேட்டு பிரதம நீதியரசருக்கு இளைஞர் ஒருவர் எழுதிய கடிதம் தொடர்பாக உயர் நீதிமன்றம் அவருக்கு பாதுகாப்பு வழங்குமாறு தீர்ப்புக் கூறியுள்ளது.

இவர் தனது கடிதத்தில் 5-4-1989 இல் நான் பொலிசாரால் கைதானேன் பலத்த சித்திரவதைக்கு ஆளாகி குற்றம் எதுவும் தெரிவிக்கப்படாமலேயே 12-5-1989 வரை பூஸ வில் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன்- எனது விடுதலைகோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கை தொடர்ந்தேன்- 14-12-1992 இல் 3500ரூபா நட்டஈடும், விடுதலையும் கிடைத்தது- அதற்கு சில நாட்களுக்கு முன்னதாக என்னை முன்பு கைதுசெய்த பொலிஸ் அதிகாரி என்னை மீள ஒப்படைக்கும்படியும், அல்லாவிடின் என் குடும்பம் அழிக்கப்படும் எனவும் அச்சுறுத்தினார். இதனால் மீண்டும் அடிப்படை உரிமைமீறல் வழக்கு தொடர்ந்தேன். உயிர் வாழ உரிமைகோரி தொடரப்பட்ட அந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டு விடுதலையான என்னை மீள கைது செய்வதை தடுக்க நீதிமன்று தீர்ப்பு வழங்கியது.

அப் பொலிசார் மீண்டும் தொல்லை கொடுத்தனர். 22 12-93 அன்று என்னை வந்து சரணடையுமாறு அப் பொலிசார் கூறினர்- அன்று நான் சரணடையவில்லை. பொலிசாரின் சித்திரவதைக்கு நன் உள்ளாவேன் என அஞ்சுகிறேன். உயர் நீதிமன்ற தீர்ப்பையும்மீறி பொலிசார் செயற்படுகின்றனர். எனவே என் உயிருக்கு பாதுகாப்பு அளியுங்கள் எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து நீதிமன்றம் தனது தீர்ப்பில் 1993 டிசம்பரில் மனுதாரரை சரணடையுமாறு பொலிசார் உத்தரவிட்டிருக்கின்றனர். பயமுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மனுதாரருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என குறிப்பிட்டது.

## சிங்கள ஊர்காவற்படைக்கு ரி-56 துப்பாக்கி பயிற்சி

சிறிலங்கா அரசினால் நியமிக்கப்பட்ட எல்லைப்புற சிங்கள முஸ்லிம் ஊர்காவற்படையினருக்கு ரி-56 துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியை அரசுவழங்குகின்றது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இப்பயிற்சி வழங்கப்படுகிறது

500 ஊர்காவற்படைவீதம் இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்களை அச்சுறுத்தி வரும் இந்த ஊர்காவற்படையினருக்கு இப்பயிற்சி வழங்கப்படுவது ஆபத்தானதாக அமையும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

15 ஆயிரம் பேர் கொண்ட ஊர்காவற் படையின் பாவனைக்கு இதுவரை 303 ரக துப்பாக்கியே வழங்கப்பட்டிருந்தது.

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் 11 பேர் மேலும் நியமனம்

(கொழும்பு)

மேலும் பதினொரு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை நியமிப்பது என சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்களை ஆதாரம் காட்டி ஐலண்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது

ஏற்கனவே நாற்பதுக்கு மேற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளபோதும் மேலும் பதினொரு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களை இம் மாத இறுதிக்குள் நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நவம்பர் மாதம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பிற்கெனவே இத்தொகை அதிகரிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

## பொ.ம.ஐ.மு.வுடன் இணைய வாசுதேவ விருப்பம்

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் நவசமசமாஜகட்சி இணைவதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்கு தமக்கு முழு அதிகாரத்தையும் கட்சியின் அரசியல் சமிட்டி வழங்கியிருப்பதாக அதன் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இட ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பூர்வாங்க பேச்சுகளில் ஈடுபட்டு வருவதாக அவர் 'திவயின' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்

ஆளும் ஐக்கிய தேசிய கட்சியை எதிர்வரும் தேர்தலில் தோல்வியடையச்செய்வதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் இதனை அடிப்படையாகக் கொண்டே இப் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாநகரசபைக்கு

27 ...

## சுகாதார விழா

(தொல்புரம்)

சுழிபுரம்திருவடிநிலை சைவ தமிழ் கலவன் பாடசாலையில் சுகாதார விழா கடந்த வெள்ளி அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருவே மோகனநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி சுகாதார விழாவில் பிரதம விருந்தினராக வலிமேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலக ஆயுர்வேத வைத்திய அதிகாரி கலாநிதி திரு பூ கயிலாயநாதன் அவர்கள் கலந்துகொண்டு தொற்றுநோய் தடுப்பு முறைகள் பற்றியும் போசாக்குள்ள உணவுவகைகளின் அத்தியாவசியம் பற்றியும் சிறப்புரை நிகழ்த்தினார். சிரேஷ்ட ஆசிரியர் ந. சபேசர்மா நன்றியுரை வழங்கினார். இந் நிகழ்வில் மாணவ மாணவியர், ஆசிரியர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர் (41)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வதிரி வடக்கு மெதடிஸ் மிஷன்தமிழ் வித்தியாலய வருடாந்த பரிசளிப்புவிழா நாளை மறுதினம் வித்தியா...

## 6 மாகாண செயலர்களுக்கு ஐ.தே.கட்சியிலிருந்து கல்தா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச காரியாலய செயலாளர்கள் ஆறு பேருக்கு தமது பதவிகளில் இருந்து விலகுமாறு பணிப்பு அடங்கிய கடிதம் கடந்த திங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கட்சியை புனர்நிர்மாணம் செய்யவும் இதன் மூலம் கட்சியின் புதிய கொள்கைகளை செயல்படுத்தும் முகமாகவும் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் ஜனாதிபதித் தேர்தல்களில் வெற்றி கொள்ளும் முகமாகவும் இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்காவின் பணிப்பின் பெயரில் இந்நடவடிக்கையில் தான் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்த அவர் இதில் அடங்குபவர்களின் பெயர் விபரங்களை தெரிவிக்க மறுத்துள்ளார்.

இதே வேளை மேற்படி ஆறு பேரும் முன்னாள் பொதுச் செயலாளர் சிறிசேன கூரேயின் மிக நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள் என்றும் காமினியின் வருகையை முழுமையாக எதிர்த்து வந்தவர்கள் எனவும் தெரிய வருகின்றது.

## போதனா மருத்துவ மனை; மலக் குழி நிறையும் ஆபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் மல சலத்தை கலக்கி வெளியேற்றும் இயந்திரம் இன்மையினால் மலம் குழிகளில் நிறையும் ஆபத்து தோன்றியுள்ளது.

தற்போது சலம் மற்றும் கழிவு நீர் போன்றவையே வெளியேற்றப்பட்டு வருவதாகவும் மலம் மற்றும் ஏனைய கழிவுகள் கலக்கி வெளியேற்றப் படுவதில்லை. எனவே இவை மேற்படி கிடங்குகளில் படிவாக பதிந்து வருவதாகவும் மிகவிரைவில் இக் கிடங்கு நிரம்பி வழியும் நிலை தோன்றியுள்ளதாக தெரிய வருகின்றது.

இதே வேளை மேற்படி கழிவுகளை கலக்கி வெளியேற்றும் இயந்திரத்தை கொள்வனவு செய்வது தொடர்பாக சிலர் அன்பளிப்புகளை வழங்கியதாகவும் ஆனால் இன்றுவரை அவ் இயந்திரம் கொள்வனவு தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

(நி, க)

## யாழ். நகர வீதிகளை செப்பனிட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இம் முறை யாழ் மாநகர சபைக்கென எடுத்து வரப்படுகின்ற தார் அதன் எல்லைகளுக்குள்ள வீதிகளில் மறு தாரிடல் மற்றும் குன்றுகள் குழிகள் போன்றவற்றை செப்பனிட மட்டுமே பயன்படுத்தபடவுள்ளன.

இவ்வாறு வீதிகள் செப்பனிடப்படாமல் இருந்தால் வீதிகள் மிகவும் மோசமாக பழுதடைந்து செல்லக் கூடிய சூழ்நிலை உள்ளதனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மாநகர சபைக்கென எடுத்து வரப்படுகின்ற தாரிற்கான பணம் சபை நிதியில் இருந்து பெறப்பட்டதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (பா)

## சாவகச்சேரி தபாலகத்தில் உதவிப்பணம் பெறுவதில் பொதுமக்கள் சிரமம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி தபாலகத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர் குறிப்பிட்ட ஒரு திகதியில் பணத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் அலைகின்றார்கள்.

கடந்த சில மாதங்களாக பெற்றுக் கொள்ள முடிந்த இப் பணம் தற்போது ஒழுங்காகப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. தபாலகத்திற்குச் சென்றால் அங்கும் வழங்கப்படும் திகதியை சரியாகக் கூறமுடியாமல் உள்ளனர். பணப் பட்டியல் உதவி அர...

துங்கா அதிகாரத்தில் இருக்கும்வரை இம்முறையல்ல, அடுத்த தேர்தல்களில் கூட தீர்வு எட்டப்படுமோ என்பது கேள்விக்குரியதொன்றே ஆகும்.

இதேசமயம், இனப்பிரச்சினையைத் தேர்தலுடன் தொடர்புபடுத்தி அதை அரசியல் ஆக்காது தனிப்பிரச்சினையாக எடுத்துத் தீர்க்க வேண்டும் என்ற அமைச்சர் ஹமீத்தின் கூற்றானது, இனப்பிரச்சினைக்கு சமாதான ரீதியில் அரசியல் தீர்வு ஒன்று காண்பதற்குச் சிறப்பானதொரு ஆலோசனைதான். இது அவரது நீண்டகால அரசியல் அனுபவத்தின் காரணமாக வெளிவந்ததாகவும் இருக்கலாம்.

ஆனால், இதுஎந்தவகையிலும் சாத்தியமாகக்கூடியதல்ல. ஏனெனில்இதில் ஹமீத்தின்கருத்தே முரண்பாடாக உள்ளது. தேர்தலின் முன்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என அமைச்சர் ஹமீத் கூறியதே அவரது முன்னைய கருத்திற்கு முரணான கூற்றாகும். அதாவது, ஹமீத்தே விரும்பியோ விரும்பாமலோ தேர்தலுடன் இனப்பிரச்சினையை இணைத்து விட்டார் என்பதே உண்மையாகும்.

இந்நிலையில், ஒவ்வொரு தேர்தலிலும் இனவாதம் பேசியே மாறி மாறி ஆட்சிக்கு வந்தவர்கள், ஆட்சியை நடத்திச் சென்றவர்கள் எவ்வாறு இனப்பிரச்சினையை தேர்தலுடன் தொடர்புபடுத்தாது தனிப்பட்ட அரசியல் விவகாரமாகக் கொண்டு பிரச்சினைத் தீர்விற்கு முன் வருவார்கள்? அவர்களினால் அவ்வாறான உயர்ந்த நிலை அரசியல் பக்குவத்தை எவ்வாறு எட்டி விட முடியும்?

இன்றுள்ள சிங்கள அரசியல்வாதிகளின் குருநாதர்கள், வழிகாட்டிகள் அனைவருமே தேர்தலுக்காக இனவாதத்தைத் தூக்கிப் பிடித்தவர்கள்தான். தேர்தல்லாபம் கருதியே ஒடுக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு வந்ததோடு, இனப்பிரச்சினைத் தீர்விற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதெல்லாம் அவற்றைக் குழப்பி அடித்தவர்கள். இதற்கு உதாரணம் கூறுவதற்கு பண்டாரநாயக்கா என்றோ, சேனநாயக்கா என்றோ, ஜே. ஆர். ஜெயவர்த்தனா என்றோ, பிரேமதாசா என்றோ அன்றி டி. பி. விஜேதுங்கா என்றோ பாகுபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. சகலருமே ஒரே வழியைத்தான் கடைப்பிடித்தார்கள். ஆனால், அவர்களின் வேகமும் தந்திரமும் தான் மாறுபட்டவை அத்தோடு, தமதுதிறமையால் சிலர் அதனை மறைக்கவும் முனைந்தனர். ஆனால், எவரும் அதற்கு விதிவிலக்கல்ல.

சிலசமயம் மறுவளமாக தேர்தல் காலங்களில் தமிழரின் உரிமை பற்றியும், பிரச்சினை பற்றியும் சில சிங்களக் கட்சிகள் கரிசனை உள்ளவைபோல் காட்டிக் கொள்வதும் உண்டு, ஆனால், அவர்கள் தமிழரின் வாக்குகளில் குறியாக இருந்தனரே ஒழிய தமிழர் பிரச்சினை தீர்வில் அக்கறை காட்டவில்லை, 1977 தேர்தலின்போது தமிழர் பிரச்சினை தீர்த்து வைக்கப்படும் எனக் கூறிய ஐ. தே. கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் 'போர் என்றால் போர்' எனப் பிரகடனம் செய்தது.

இவ்வாறாக இனவாதமே அரசியலாகி விட்ட சிங்கள அரசியல்வாதிகளிடம் இனப்பிரச்சினைக்குத் தேர்தலின் முன் தீர்வு காணப்பட வேண்டும். தேர்தலுடன் இனப்பிரச்சினை இணைக்கப்படக் கூடாது என்ற கோரிக்கைகள் எந்தளவிற்கு தாக்கத்தை விளைவிக்கக் கூடும்? சிலவேளை மறுவளமாக இது கோரிக்கை விடுத்தவருக்கே ஆபத்தாக அமைந்து விடவும் கூடும். ஆகையினால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு உடன் காணப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுத்த அமைச்சர் ஹமீத் இவ்விடயத்தில் எச்சரிக்கையாக இருத்தல் நல்லது.

---

விருந்தினராக வலிமேற்கு பிரதேச சபை சுகாதார உப அலுவலக ஆயுர்வேத வைத்திய அதிகாரி கலாநிதி திரு பூ கயிலாயநாதன் அவர்கள் கலந்துகொண்டு தொற்றுநோய் தடுப்பு முறைகள் பற்றியும் போசாக்குள்ள உணவு வகைகளின் அத்தியாவசியம் பற்றியும் சிறப்புரை நிகழ்த்தினார். சிரேஷ்ட ஆசிரியர் ந. சபேசர்மா நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்வில் மாணவ மாணவியர், ஆசிரியர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர் (41)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

வதிரி வடக்கு மெதடிஸ் மிஷன்தமிழ் வித்தியாலய வருடாந்த பரிசளிப்புவிழா நாளை மறுதினம் வித்தியாலய அதிபர் திரு செ. சதானந்தன் தலைமையில் நடைபெறுகின்றது. (25)

## பொருட்காட்சி

(பருத்தித்துறை)

வதிரி வடக்கு மெதடிஸ் மிஷன் தமிழ் வித்தியாலய கற்றல்கற்பித்தல் துணைச் சாதனங்களின் பொருட்காட்சியும் மாதிரிச் சந்தையும் நாளை வித்தியாலய அதிபர் திரு. செ சதானந்தன் தலைமையில் நடைபெறுகின்றது. (25)

---

மேற்பட்ட பிரதிப் பொலிஸ மா அதிபர்கள் நியமிக்கப்பட் கரிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

## பொ.ம.ஐ.முவுடன் இணைய வாசுதேவ விருப்பம்

(கொழும்பு)

பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் நவசமசமாஜகட்சி இணைவதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்கு தமக்கு முழு அதிகாரத்தையும் கட்சியின் அரசியல் சமிட்டி வழங்கியிருப்பதாக அதன் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக இட ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பூர்வாங்க பேச்சுகளில் ஈடுபட்டுவருவதாக அவர் 'திவயின' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்

ஆளும் ஐக்கிய தேசிய கட்சியை எதிர்வரும் தேர்தலில் தோல்வியடையச்செய்வதற்கு எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் இதனை அடிப்படையாகக் கொண்டே இப் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழ். மாநகரசபைக்கு 37 தள்ளுவண்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு புதிதாக 37தள்ளு வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன

இவற்றை வடக்கு கிழக்கு மாகாணசபை யாழ் மாநகர சபைக்கு வழங்கியுள்ளதாக அதன் ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ் நகரப்பகுதிகளில் சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்க்கும் பொருட்டு அண்மையில் வடக்குகிழக்கு மாகாணசபையை தாம் இரண்டு ரக்ரர்களையும் 37 தள்ளுவண்டிகளையும் தந்துதவுமாறு கேட்டதற்கிணங்க முதலாவதாக 37தள்ளு வண்டிகளை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் இவற்றை இங்கு எடுத்துவருவதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ளுமாறும் வடக்குகிழக்கு மாகாணசபை ஆணையாளரைப் பணித்துள்ளது. (பா)

---

சபைக்கென எடுத்து வரப்படுகின்ற தார் அதன் எல்லைகளுக்குள்ள வீதிகளில் மறு தாரிடல் மற்றும் குன்றுகள் குழிகள் போன்றவற்றை செப்பனிட மட்டுமே பயன்படுத்தபடவுள்ளன.

இவ்வாறு வீதிகள் செப்பனிடப்படாமல் இருந்தால் வீதி நிலை உள்ளதனாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மாநகர சபைக்கென எடுத்து வரப்படுகின்ற தாரிற்கான பணம் சபை நிதியில் இருந்து பெறப்பட்டதாக யாழ் மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (பா)

சாவகச்சேரி தபாலகத்தில்

## உதவிப்பணம் பெறுவதில் பொதுமக்கள் சிரமம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி தபாலகத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர் குறிப்பிட்ட ஒரு திகதியில் பணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அலைகின்றார்கள்.

கடந்த சில மாதங்களாக தபாலகத்தில் அந்தந்த மாதாந்த உதவிப் பணம் 14-ம், 15-ம் திகதிகளில் வழங்கப்படுகின்றது. அதற்கு முன்னர் ஒவ்வொரு மாதமும் 6 ம் திகதி முதல் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்தது. அப்போது ஒழுங்காகப் பெற்றுக் கொள்ள முடிந்த இப் பணம் தற்போது ஒழுங்காகப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது. தபாலகத்திற்குச் சென்றால் அங்கும் வழங்கப்படும் திகதியை சரியாகக் கூறமுடியாமல் உள்ளனர். பணப் பட்டியல் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இருந்தே எடுத்து வரப்படுகின்றது. பட்டியலை விரைவாக அனுப்பினால் மக்கள் தாமதமின்றி அவற்றை பெற முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (86)

## தொழி. வெற்றிடம்நிரப்ப மாநகரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையில் சுகாதாரத் தொழிலாளர் பற்றாக் குறை நிலவி வருவதாக யாழ் மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

இப்பற்றாக் குறையாகவுள்ள சுகாதாரத் தொழிலாளர்களின் வெற்றிடங்களை நிரப்ப தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

தற்சமயம் யாழ்மாநகர சபையில் சுமார் 180 சுகாதாரத் தொழிலாளர்கள் இருப்பதாகவும் இன்னமும் தாம் 30 சுகாதாரத் தொழிலாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அத்துடன் இவர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படவுள்ளதாக் தெரிவித்தார். (பா)

---

## இந். தேர்தல் சட்ட திருத்தம் கட்சிகளின் பரிசிலனைக்கு

(டில்லி)

இந்தியாவின் தேர்தல் சட்டங்களில் திருத்தம் செய்வது தொடர்பாக மத்திய அரசு அரசியல் கட்சிகளின் பரிசிலனைக்காக இரு மசோதாக்களை அனுப்பியுள்ளது.

தலைமைத்தேர்தல்ஆணையாளருக்கு சமமான அதிகாரமுடைய ஏனைய இரண்டு ஆணையாளர்களை நியமிப்பது தொடர்பாக ஒரு மசோதாவும், வாக்காளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவது பற்றி தேர்தல் ஆணையகத்தின் தன்னிச்சையான அறிவிப்பை கட்டுப்படுத்துவது தொடர்பாக மற்ற மசோதாவும் அமைந்துள்ளது.

மத்திய றிசர்வ் படை

மைலாப்பூர், மற்றும்பெருந்துறை தொகுதிகளில் மத்திய அரசின் இரண்டு பட்டாலியன் றிசர்வ் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேர்தல் முடியும் வரை இவர்களது பணி நீடிக்கப்படும் என்றும் பாதுகாப்பு பணிகளை ஒருங்கிணைப்பதற்காக தனியான அலுவலகம் அமைக்கப்படும் என்றும் தமிழக காவல்துறை வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

ஈரான் புகார்

பொஸ்னியாவில் முஸ்லீம்களின் பாதுகாப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் சபை உரியவகையில் செயற்படவில்லையென்று ஈரான் ஐக்கிய நாடுகள் சபை மீது குற்றம் சுமத்தியுள்ளது. முஸ்லிம்களுக்கு பாதுகாப்பளிக்க சமாதானப் படை ஒன்றை அனுப்ப முஸ்லிம் நாடுகள் விருப்பம் தெரிவித்த போதும் அதனை நிறைவேற்ற ஐ. நா சபை அனுமதிக்கவில்லை எனவும் ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலாயத்தி தெரிவித்துள்ளார்.

## அடக்குமுறையை இனிமேல் இந்த நாடு அனுமதியாது

-நெல்சன் மண்டேலா

(ஜோகானஸ்பேர்க்)

எல்லா இன மக்களும் சமத்துவமாக அச்சமின்றி வாழக்கூடிய ஒரு புதிய அமைப்பை தோற்றுவிக்கப் போவதாக தென்னாபிக்காவின் புதிய ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

பிரிட்டோரியாவில் தமது பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டந் பல்வேறு உலகத் தலைவர்கள் மத்தியிலும் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிடுகையில், தென்னாபிரிக்கா இனி ஒருபோதும் அடக்குமுறையை அனுமதிக்காது என்றும், வற்புறுத்தி வழிக்கு கொண்டு வருவதற்கான முறைமூலம் நம்பிக்கையற்ற இருண்ட சகாப்தம் ஒன்றிலிருந்து நாடு மீட்கப் பட்டுவிட்டது என்றும் தெரிவித்தார்.

## கப்பல் பயணி மயக்கம்

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தினூடாக கப்பல் மூலம் கொழும்புக்கு பயணமாவதற்கு இழுவைப்படகு மூலம் பருத்தித்துறையில் இருந்து கப்பலுக்குச்சென்ற பயணி ஒருவர் மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று முன்தினம் மாலை அனுமதிக்கப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த மணிவண்ணன் என்பவர் இவ்வாறு மயக்கமடைந்தார் கப்பலில் மயக்கமுற்ற இவரை துறைமுகத்திலிருந்து வாகனம் ஒன்றின் மூலம்ஏற்றிச்செல்லப் பட்டு அனுமதிக்கப்பட்டார். (யோ)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.05 12-வியாழன் இரவு

08.01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10 - உரை - ''நடுகல்லான நட்பு''
08.20 - உழைப்போம் உயர்வோம் - நிகழ்ச்சியில் 'நிர்மாணவேலைகள்செய்வோம்'' - குறுநாடகம்
08.30 - செய்திகள்
08.40 - லெப்ரினன்ட் இளங்கோ நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''உறுதியின் உறைவிடம்''

1994.05 13-வெள்ளிகாலை
07.02 - மாவீரவணக்கம்
07 15 - விடுதலை கானங்கள்
07 30 செய்திகள்
07 35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தொடர்ந்து விடுதலை கானங்கள்.

# எந்த இயக்கத்தையும் தடைசெய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு

## அமைச்சர் ராஜேஸ் பைலட் தெரிவிப்பு

(சென்னை)

குற்றச்சட்டத்தின்கீழ் எந்த ஒரு இயக்கத்தையும் தடைசெய்யும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்கிறது என்றும்,

இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த மத்திய அரசின் அனுமதி தேவை இல்லை என்றும் மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் மீண்டும் தெரிவிக்கின்றார்:

விடுதலைப் புலிகளின் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்ற தமிழ் நாடு அரசின்கோரிக்கைமீது நேற்று மாநிலங்கள் அவையில் எழுத்து மூலமான கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசின் வேண்டுகோளுக்கிணங்க விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சட்ட விரோத நடவடிக்கைகள் பற்றி தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

## பல்கலை. தெரிவானோர் விபரம் வெளியாகியது

[நமது நிருபர்]

1993/94 பல்கலைக் கழக கல்வி ஆண்டிற்கு சகல பீடங்களுக்கும் தெரிவாகிய மாணவர்களது பெயர் விபரங்கள் கொழும்பில் வெளியாகியுள்ளன.

இதன்படி யாழ் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகிய மாணவர்களது பெயர் விபரங்கள் உத்தியோக பூர்வமாக வெளியாகியுள்ள போதிலும் தபால் சேவையில் ஏற்படும் தாமதங்களால் இதுவரை யாழ் பல்கலைக் கழகத்திற்கு வந்து சேரவில்லை என பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை மருத்துவ பீடத்திற்கு தெரிவானவர் விபரம் ஏற்கனவே வெளிவந்தமை தெரிந்ததே.

## வீரகுமாரின் விற்பனை நிலையத்தின் ஏலப்பணத்தை வழங்க நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை கொலைசெய்ததாக சந்தேகிக்கப்படும் வீரகுமாரின் வர்த்தக நிலையத்தில் இருந்த பொருட்களை நீதிமன்றத்தினால் ஏலவிற்பனை செய்ததன்மூலம் கிடைத்த பணத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி சம்பா முத்துபால நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். வீரகுமாரின் வர்த்தக நிலைய பொருள்களின் ஏல விற்பனை நீதிமன்ற அனுமதியில் நடைபெற்றதாகவும், இதன் மூலம் பெறப்பட்ட பணம் முதலில் இவ் வியாபார நிலையத்திற்கு கடன் வழங்கியவர்களுக்கு திருப்பிச் செலுத்தப்படும் என கூறப்பட்டது.

## உதைபந்தாட்ட போட்டி

அளவெட்டி விநாயகர் வி. கழகத்தால் மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தப்படும் உதைபந்தாட்ட போட்டித் தொடரின் இன்றைய போட்டிகளாக இரண்டாம் பிரிவு ஆட்டத்தில் சித்தி விநாயகர் வி. கழகத்தை எதிர்த்து றோயல் வி. கழகமும் முதல் பிரிவு ஆட்டத்தில் மாவத்தை வி. கழகத்தை எதிர்த்து கலைவாணி வி. கழகமும் மோதவுள்ளன. போட்டி பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமாகும்.

## மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம், கமலாம்பிகை வித்தியாலயம் ஆகியன இணைந்து நடாத்தும் 'இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வித்தியாலயங்களின் அதிபர்களான திரு. நா. தர்மலிங்கம், திரு மு. மகேந்திரன் ஆகியோர் தலைமையில், புனிதமரியாள் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (22)

யாழ் ஸ்ரீதரில்...

தினசரி மாலை 3, 6 மணி

சனி, ஞாயிறு காலை 10, 30

மாலை 3, 6 மணி

"காற்றுவெளி"

இத்துடன்

மார்ச் 94

"ஒளிவீச்சு"

காண்பிக்கப்படும்

## தொடர் மாடியில் தொற்று நோய்

(நல்லூர்)

குருநகர் தொடர் மாடியில் நோய் தோன்றும் அபாயம் உருவாகி வருவதாக அங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றார்கள். அங்குள்ள டி புளொக் மாடியின் மூன்றாம், இரண்டாம் மாடியில் உள்ள அழுக்கு நீரை வெளியேற்றும் குழாய்களில் வெடிப்புக்கள் உருவாகி உள்ளதனால் 5ம் மாடியில் இருந்து வரும் மலசல கூட அழுக்குகள் இங்குள்ள வெடிப்புக்கள் ஊடாக மலக் குழியை கீழே அடைவதற்கு முன்னர் வெளியேறுவதாகவும் இதனால் இவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக யாழ் மாநகர சுகாதாரப் பகுதியினரிடம் இம் மக்கள் முறையிட்டும் எதுவித பிரயோசனமும் ஏற்படவில்லை எனவும் இவர்கள் தெரிவித்துள்ளார்கள் (17)

## கம இரசாயனங்களுக்கு புதிய விலை நிர்ணயம்

கம இரசாயனங்களையும் மற்றும் நுளம்பு, ஈ போன்றவற்றைக் கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் உயிர் கொல்லி மருந்துகளையும் கொள்கலன்களில் குறிக்கப்பட்ட விலைகளுக்கே விற்கப்படல் வேண்டுமென கடந்த 2-ம் திகதி யாழ் செயலகத்தில் நடைபெற்ற விலை நிர்ணயக் குழுக்கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர்.

மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இவ்வாறு குறிக்கப்பட்ட விலையிலும் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரிவித்துள்ளனர்.

## சமூகம் தரவும்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிராந்திய நிலையத்தில் பயிற்சி பெறும் தொலைக் கல்வி ஆசிரிய மாணவர்கள் அனைவரும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யா/ச வகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திற்கு தவறாது சமூகம் தரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (86)

## சிவிலுடை இராணுவம் கண்டியில் அட்டகாசம்

(கண்டி)

கண்டியிலுள்ள ரஜவெல (தெல்தெனிய) நகரத்திற்கு சிவிலுடையில் வந்த இராணுவத்தினர் பெரும் அட்டகாசம் புரிந்துள்ளனர். இவ் வெறியாட்டத்தின்போது பலர் காயமடைந்ததுடன் ஒரு ஓட்

படையினர் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட வாதமே இந்த அசம்பாவிதங்களுக்கு காரணமாகும்.

படையினரின் அட்டகாசத்தைத் தொடர்ந்து கடை உரிமையாளர்களும் சிப்பந்திகளும் ஒட்ட மெடுத்தனர்.

## மொசாம்பிக் அமைதிப் படையில் சிறிலங்கா பொலிஸ் படையினர்

(கொழும்பு)

மொசாம்பிக் நாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையுடன் இணைந்து பணியாற்ற சிறிலங்காப் பொலிஸ் உத்தியோகத்தர் பன்னிரெண்டு பேர் நேற்று முன்தினம் மொசாம்பிக் சென்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அதிக இராணுவத்தினர் தேவை என்பதால் இராணுவத்தினருக்குப் பதிலாக பொலிஸ் அதிகாரிகள் அனுப்பப்பட்டிருப்பதாக பொலிஸ் உயர் அதிகாரி கோட்டகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினையில் ஐ.நா. சபை தலையிடுவதை அனுமதிக்க மறுக்கும் சிறிலங்கா அரசு மொசாம்பிக் நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க ஐ.நா. படையுடன் கடமை புரிய பொலிசாரை அனுப்பி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆதாரம் காட்டி பெறவும்

பை ஒன்று பழைய பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்குள் கொப்பியும் பாடசாலை உணவு முத்திரையும் உள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## மார்ச் "ஒளிவீச்சு" வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளிவீச்சு மார்ச் மாத வீடியோ சஞ்சிகை வெளிவந்துள்ளது இதில் தமிழீழத்தில் சிறிலங்கா படைகளுக்கு எதிரான தமிழீழவிடுதலைப் புலிகளின் தாக்குதல்கள், முல்லை மாவட்ட கலைஞர்களை தமிழீழ தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் கௌரவித்து பரிசில்கள் வழங்கியமை; இந்தியாவிலிருந்து தமிழீழத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்த இடம் பெயர்ந்த மக்களுடனான நேர் காணல்கள், அனைத்துலக மகளிர் நாள் நிகழ்ச்சிகள், நிதர்சனம் மகளிர் அமைப்பினால் முதன் முதலாக உருவாக்கப்பட்ட உண்மைச் சம்பவம் ஒன்றைத் தழுவிய "இனி" எனும் குறும் படம் ஆகியவற்றுடன் விளையாட்டு கலை நிகழ்ச்சி என்பனவும் இடம் பெற்றுள்ளன.

## சந்திரிகாவின் பாதுகாப்பு; மேற்குலகம் அக்கறை

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவின் உயிர்ப் பாதுகாப்பு குறித்து தாம் கவலை கொண்டுள்ளதாகவும் இது குறித்து அரசாங்கம் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் மேற்குலக தூதரக வட்டாரங்கள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளன

அண்மையில் அவர் தனக்கு உயிராபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாக சிறிலங்கா பொலிசாருக்கு முறையிட்டிருப்பதாகவும் ஆனால் அரசாங்கம் இது குறித்து அக்கறை செலுத்தவில்லை என சந்திரிகா குமாரணதுங்கா மேற்குலக தூதரகங்களுக்கு முறையிட்டதைத் தொடர்ந்தே அவை மேற்குறிப்பிட்டவாறு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பிரேமா

ஒரு சில அமைச்சர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அவர் மேலும் கூறினார்.

## கூரே

க்கு வரவிருப்பதாகவும் அதனைத் தொடர்ந்து பல மாற்றங்களை ஏற்படுத்தத் தான் திட்டமிட்டுள்ளதாகவும் பல சிரேஷ்ட அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேறுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாதாள

யேற்றியதாகவும் இவரின் வெளியேற்றத்தை கேள்விப்பட்ட அமைச்சர் தனது வீட்டு அருகே தொடர்மாடி வீட்டில் இவருக்கு புகலிடம் அளித்து பாதுகாத்ததாகவும் இதனை தொடர்ந்து இவர் அமைச்சரை பாதுகாத்தார் எனவும்

## அகதிகளை

வது: இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கொடுத்திருக்கும் தகவல்கள் தவறானவையாகும். இலங்கைத் தமிழர் நிலையை நன்கு அறிந்துள்ள கனடா இங்கு அடைக்கலம் கோரியவர்களில் 90 வீதமானவர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது. இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் அணுகுமுறையை சுவிட்சர்லாந்து பின்பற்றுவது கவலை அளிக்கக்கூடிய விடயமாகும். இவ் விடயத்தை சுவிட்சர்லாந்து மனிதாபிமான அடிப்படையில் மறுபரிசீலனை செய்வது அவசியமானதாகும்.

திரு: மார்க்ஸ் பேக்கர்

## எழுத்துத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விவலயம் - 1, வலயம் - 2 இல் வெற்றிடமாகவுள்ள முதன்மை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துத் தேர்வு இம் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை இரு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தற்சமயம் முதன்மை ஆசிரியர் பணியிலில்லாத விண்ணப்பதாரிகள் தமது அனுமதி அட்டைகளை வலயம் - 1 கல்விப் பணிமனையில் நேரடியாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (பா)

யாழ் ஸ்ரீதரில்...

தினசரி மாலை 3, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10, 30
மாலை 3, 6 மணி

## "காற்றுவெளி"

இத்துடன்

மார்ச் 94

"ஒளிவீச்சு"

காண்பிக்கப்படும்

16 - 5 - 94 முதல்

## "மண்ணுக்காக"

(சி-9370)

சாவகச்சேரி

தெய்வேந்திரா வெண்திரையில்

சிவாஜி, பத்மினி நடித்த

**தில்லானா மோகனாம்பாள்**

நெல்லியடி

மகாத்மா வெண்திரையில்

எம். ஜி. ஆர். பானுமதி நடித்த

**நாடோடிமன்னன்**

தினசரி 6. 30 காட்சிகளாயும்,
சனி, ஞாயிறு தினங்களில்
10. 30, 2. 30, 6. 30 காட்சிகளாயும்
காண்பிக்கப்படுகின்றது. (கலர்)

(சி-9386)

யன இணைந்து நடாத்தும் 'இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வித்தியாலயங்களின் அதிபர்களான திரு. நா. தர்மலிங்கம், திரு மு. மகேந்திரன் ஆகியோர் தலைமையில், புனிதமரியாள் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (22)

தில் பயிற்சி பெறும் தொலைக் கல்வி ஆசிரிய மாணவர்கள் அனைவரும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு யா/ச வகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்திற்கு தவறாது சமுகம் தரும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (86)

# சிவிலுடை இராணுவம் கண்டியில் அட்டகாசம்

(கண்டி)

கண்டியிலுள்ள ரஜ வெல (தெல்தெனிய) நகரத்திற்கு சிவிலுடையில் வந்த இராணுவத்தினர் பெரும் அட்டகாசம் புரிந்துள்ளனர். இவ் வெறியாட்டத்தின்போது பலர் காயமடைந்ததுடன் ஒரு ஓட்டோவும் மூன்று கடைகளும் லொறிகளும் சேதமாக்கப்பட்டுள்ளன. கடந்த வியாழனன்று நடந்த இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; உணவு விடுதியொன்றில் இப் படையினர் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஏற்பட்டவாதமே இந்த அசம்பாவிதங்களுக்கு காரணமாகும்.

படையினரின் அட்டகாசத்தைத் தொடர்ந்து கடை உரிமையாளர்களும் சிப்பந்திகளும் ஓட்டமெடுத்தனர். கண்டி மற்றும் தெல்தெனிய பொலிசாருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவர்கள் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டினுள்கொண்டு வந்தனர்.

### பெறுபேறுகள்

கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களம்வந்துசேர்ந்தன.

இவற்றை கொழும்பில் இருந்து யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தம்முடன் எடுத்து வந்துள்ளார்.

இப் பெறுபேறுகள் நேற்றைய தினமே தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

### சிப்பாய்

ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றதாகவும் இவர் நாரஹேன்பிட்டியைச் சேர்ந்த பிரதீப் எனவும் தெரியவருகின்றது.

### கூரே இரு

இதேவேளை தனது வீடுகளையும் ஏனைய சொத்துக்களையும் விற்பனை செய்துள்ள அமைச்சர் சிறிசேன கூரே நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

# விசேட பட்டியலில் பல்கலைக்கு பலர் தெரிவு

(நமது நிருபர்)

1992 - 93 பல்கலைக்கழக கல்வி ஆண்டிற்கு குறித்த சில பாடங்களுக்கு விசேடமாக அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு தெரிவாகிய மாணவர்களது பெயர் விபரங்கள் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவர்களில் கிறிஸ்தவ நாகரிகத்திற்கு 33 பேரும் வரலாற்றிற்கு 3 பேரும் சமஸ்கிருதத்திற்கு ஒருவரும் ஆங்கிலத்தில் ஏழு பேருக்கும் அனுமதிகிடைத்துள்ளதுடன் இந்து நாகரிகத்திலும் சிலருக்கு கிடைத்துள்ளது. இதுதவிர கண்பார்வை இழந்தவர்கள் இருவருக்கும் தேசிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய ஒருவருக்கும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது.

இவ்வாறு தெரிவானோர் தமது பெயர்களை உடனடியாக யாழ். பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்வதன் மூலம் மேற்படி கல்வி ஆண்டுடன் இணைந்து கல்வியை தொடரலாம் என யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார். (ச)

### ஆயுத

துன்பத்தில் சிக்கியிருக்கும் தமிழீழ மக்கள் தற்போது மகிழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

கள் என அவர் மேலும் கூறினார்.

### கூரே

க்கு வரவிருப்பதாகவும் அதனைத் தொடர்ந்து பல மாற்றங்களை ஏற்படுத்தத் தான் திட்டமிட்டுள்ளதாகவும் பல சிரேஷ்ட அமைச்சர்கள் அமைச்சரவையிலிருந்து வெளியேறுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பாதாள

யேற்றியதாகவும் இவரின் வெளியேற்றத்தை கேள்விப்பட்ட அமைச்சர் தனது வீட்டு அருகே தொடர்மாடி வீட்டில் இவருக்கு புகலிடம் அளித்து பாதுகாத்ததாகவும் இதனை தொடர்ந்து இவர் அமைச்சரை பாதுகாத்தார் எனவும் தெரிய வருகின்றது.

கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போதைவஸ்து கடத்தலில் இவர்கள் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

# றுகுணு நாளை வரும்

(யாழ்ப்பாணம்)

றுகுணு கப்பல் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கப்பலில் 800 தார்ப்பீப்பாக்களும், 250 மலத்தியோன் பெட்டிகளும் எடுத்து வரப்படுகின்றன.

### அகதிகளை

வது: இலங்கையில் தமிழர்களின் நிலை குறித்து இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கொடுத்திருக்கும் தகவல்கள் தவறானவையாகும். இலங்கைத் தமிழர் நிலையை நன்கு அறிந்துள்ள கனடா இங்கு அடைக்கலம் கோரியவர்களில் 90 வீதமானவர்களுக்கு அரசியல் புகலிடம் வழங்கியுள்ளது. இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்பாக ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளின் அணுகுமுறையை சுவிட்சர்லாந்து பின்பற்றுவது கவலை அளிக்கக்கூடிய விடயமாகும். இவ் விடயத்தை சுவிட்சர்லாந்து மனிதாபிமான அடிப்படையில் மறுபரிசீலனை செய்வது அவசியமானதாகும்.

திரு. மார்க்ஸ் பேக்கர் அமைச்சர் தொண்டமானை கனடாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுழிபுரம்

வெளிகளில் வீழ்ந்து வெடித்ததில் பனைமரங்கள் சேதமுற்றதாகவும் தெரியவருகிறது.

### மரணப்படை

தொடர்புசாதனங்கள் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேவேளை இவர் தலைமறைவாகியுள்ளார் எனவும் தெரியவருகின்றது. கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ. எஸ். செனிவரத்தினவுக்கு சொத்தி உபாலி மிக வேண்டியவர் என்று பொது மக்கள் தரப்பில் சொல்லப்படுகிறது.

# எழுத்துத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்விவலயம் - 1, வலயம் - 2 இல் வெற்றிடமாகவுள்ள முதன்மை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான எழுத்துத் தேர்வு இம் மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை இரு நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தற்சமயம் முதன்மை ஆசிரியர் பணியிலில்லாத விண்ணப்பதாரிகள் தமது அனுமதி அட்டைகளை வலயம் - 1 கல்விப் பணிமனையில் நேரடியாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (பா)

### வடமராட்சி

ணவில்லையெனவும் மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

நாகர் கோயிலைச் சேர்ந்த செல்வம் என்ற இளைஞர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவித்தனர். எனினும் இவர்களைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன

வடமராட்சி வடக்கு, கிழக்கு கடற் பகுதியில் தினமும் இரவு 9 00 மணி முதல் கடற்படை நடமாட்டங்கள் அதிகரித்து வருவதாக சொல்லப்பட்டது (யோ)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

றோகான் இராஜசிங்கம் மொகிரா வினோதினி
தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள்

**அனோ நிதர்சன் இவான் இனோஜன்**

இரண்டாவது முதலாவது

பிறந்த நாளை இன்று மருதனார் மடத்திலுள்ள தமது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகிறார்கள் இவர்களை பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறோம்.

துர்க்காபுரம், தெல்லிப்பழை.

கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர்

(சி-9392)

## வெகுவிரைவில்... மண்ணுக்காக

(இ)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Nallur Branch Library